TNKK180115472022

Presented on : 09-12-2022
Registered on : 09-12-2022
Decided on : 27-04-2026
Duration : 3 years, 4 months, 18 days

## **நீதித்துறை நடுவர் நீதிமன்றம், இரணியல்**

**முன்னிலை திரு. A.S. அமீர்தீன், B.A.,B.L., LLM.,D.JJJ.Psy., PGDDF.,**

நீதித்துறை நடுவர், இரணியல்

2026 ஆம் ஆண்டு **ஏப்ரல்** மாதம் 27ஆம் நாள் **திங்கள்கிழமை**

**ஆண்டுப்பட்டியல் வழக்கு எண். 150/2026**

**CASE SUMMARY**

<table>
<tr><th>Sl. No.</th><th>Description</th><th colspan="3">Remarks</th></tr>
<tr><td>1</td><td>The period of remand of the accused</td><td colspan="3">A1 A2 Remanded From : 30.07.2018<br>To : 10.08.2018<br>Other accused not Remanded</td></tr>
<tr><td>2</td><td>The date of filing of complaint/final report in the Court</td><td colspan="3">22.04.2022</td></tr>
<tr><td>3</td><td>The date of committal of the case to the Court of Sessions</td><td colspan="3">N.A</td></tr>
<tr><td>4</td><td>The date of Questioning of accused u/s 228, 240, 246 and 251 of the Code of Criminal producer 1973 as the case may be</td><td colspan="3">22.04.2026</td></tr>
<tr><td>5</td><td>Filing of all miscellaneous petitions and their result including the results on challenge before superior Court. Except routine petitions like petition under section 317 of the Code .</td><td colspan="3">U/s.359 BNSS Petition allowed in respect of compoundable offence alone on 22.04.2026<br>U/s. 348 BNSS Petition allowed on 25.04.2026</td></tr>
<tr><td rowspan="4">6</td><td rowspan="4">Date of examination in Chief and Cross examination of a witness</td><td>Witness</td><td>Chief Examination</td><td>Cross Examination</td></tr>
<tr><td>P.W.1</td><td>22.04.2026</td><td>--</td></tr>
<tr><td>P.W.2</td><td>22.04.2026</td><td>--</td></tr>
<tr><td>P.W.3</td><td>25.04.2026</td><td>25.04.2026</td></tr>
<tr><td>7</td><td>Date of examination of the accused under section 351 of the Court</td><td colspan="3">27.04.2026</td></tr>
<tr><td>8</td><td>Details of Abscondence of an accused and</td><td colspan="3">N.A</td></tr>
</table>



SYEDMOHAMED AMEER DHEEN
Digitally signed by SYEDMOHAMED AMEER DHEEN
Date: 2026.04.27 14:54:40 +0530

<table>
<tr><td></td><td>his appearance /production, as the case may be</td><td></td></tr>
<tr><td>9</td><td>Grant of stay by superior Courts and the results thereof</td><td>N.A</td></tr>
<tr><td colspan="2">அரசுக்காக, காவல் உதவி ஆய்வாளர்,<br>**குளச்சல்** காவல் நிலையம்,<br>**குற்ற எண். 161/2018**</td><td>.......................குற்றமுறையீட்டாளர்,</td></tr>
<tr><td colspan="3">**/எதிர்/**</td></tr>
<tr><td colspan="2">வால்டர் ( வயது 44/2026)<br>த/பெ.சிலுவைஇருதயம்<br>அன்பியம்–2, குறுப்பனை</td><td>............... 1ம் குற்றம் சுமத்தப்பட்ட நபர்</td></tr>
<tr><td colspan="2">சோனாஸ் ( வயது 45/2026)<br>த/பெ.சால்வதே<br>அந்தோணியார் தெரு, குறும்பனை</td><td>............ 2ம் குற்றம் சுமத்தப்பட்ட நபர்</td></tr>
<tr><td colspan="2">சீலன் (வயது 51/2026)<br>த/பெ. பிரான்சீஸ்,<br>சிலுவையார்தெரு, குறும்பனை</td><td>............ 3ம் குற்றம் சுமத்தப்பட்ட நபர்</td></tr>
<tr><td colspan="2">டிக்சிசன் என்ற டிக்சன் (வயது 55/2026)<br>த/பெ. சிலுவைஇருதயம் ,<br>அன்னைதெரசாகாலணி, குறும்பனை</td><td>............ 4ம் குற்றம் சுமத்தப்பட்ட நபர்</td></tr>
<tr><td colspan="2">டிசார்பின் என்ற டிசல்பின் (வயது 51/2026)<br>த/பெ. சிலுவைஇருதயம் ,<br>அன்னைதெரசாகாலணி, குறும்பனை</td><td>............ 5ம் குற்றம் சுமத்தப்பட்ட நபர்</td></tr>
<tr><td colspan="2">ஜெகன் (வயது 38/2026)<br>த/பெ. சிலுவைஇருதயம் ,<br>அன்னைதெரசாகாலணி, குறும்பனை</td><td>............ 6ம் குற்றம் சுமத்தப்பட்ட நபர்</td></tr>
<tr><td colspan="2">ஷாஜி (வயது 37/2026)<br>த/பெ. சிலுவைஇருதயம் ,<br>அன்னைதெரசாகாலணி, குறும்பனை</td><td>............ 7ம் குற்றம் சுமத்தப்பட்ட நபர்</td></tr>
<tr><td colspan="2">ஆல்ட்ரின் (வயது 56/2026)<br>த/பெ. பிரான்சீஸ்,<br>சிலுவையார் தெரு, குறும்பனை</td><td>............ 8ம் குற்றம் சுமத்தப்பட்ட நபர்</td></tr>
<tr><td colspan="2">வால்டர் என்ற வால்டர்நிவாஸ்<br>(வயது 48/2026)<br>த/பெ. பிரான்சீஸ்,</td><td>............ 9ம் குற்றம் சுமத்தப்பட்ட நபர்</td></tr>
</table>



SYEDMOHAMED AMEER DHEEN
Digitally signed by SYEDMOHAMED AMEER DHEEN
Date: 2026.04.27 14:54:49 +0530

| | |
|---|---|
| சிலுவையார் தெரு, குறும்பனை | |

இவ்வழக்கானது கு.ப.வ.ம.எண் 8570/2022 ஆக கோப்பிற்கு எடுக்கப்பட்டு, பின்னர் ஆ.ப.வ.எண்ணாக **22.04.2026**அன்று நீதிமன்றத்தில் மாற்றம் செய்யப்பட்டு இது நாள் வரை இந்நீதிமன்றத்தில் பரிசீலனையில் இருந்து வந்து இவ்வழக்கு **27.04.2026** இந்நீதிமன்ற இறுதி விசாரணைக்கு வரப்பெற்று அரசு தரப்பில் அரசு குற்றத்துறை உதவி வழக்கறிஞர் நிலை 1அவர்களும், குற்றம் சுமத்தப்பட்ட நபர்கள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் **திரு.S.டார்லின்** அவர்களும் ஆஜராகியும், வாதத்தை கேட்டும் ஆவணங்களை ஆராய்ந்தும் இன்று **27.04.2026** ஆம் தேதி நீதிமன்றம் **கு.வி.மு.ச 1973 அத்தியாயம் XXVIIன்** கீழ் பிறப்பிக்கும்....

**<u>தீர்ப்புரை</u>**

இத்தீர்ப்புரையில் இந்திய தண்டனைச்சட்டம் 1860 என்பது இ.த.ச 1860 என்றும், குற்றவியல் விசாரணை முறைச்சட்டம் 1973 என்பது கு.வி.மு.ச 1973 என்றும், பாரதிய சாக்சிய அதிநயம் 2023 என்பது பா.சா.அ 2023 என்றும், பாரதிய நாகரிக் சுரக்ச சங்கீதா 2023 என்பது, பா.நா.சு.ச.2023 என்றும் பதிவிடப்படுகின்றது.

**<u>1. அரசுத்தரப்பு வழக்குரையின் சுருக்கம் :–</u>**

கடந்த 29.07.2018 ஆம் தேதி 15.00 மணிக்கு பனிதாசன் என்பவர் வீட்டில் இருந்த போது 1 முதல் 9 வரையிலான குற்றம் சுமத்தப்பட்ட நபர்கள் சட்ட விரோதமாக கலகம் செய்யும் நோக்கத்துடன், கைகளில் கம்பிகளுடன் சட்ட விரோதமாக வந்து, 1 முதல் 9 வரையுள்ள குற்றம் சுமத்தப்பட்ட நபர்கள் பனிதாசன் வீட்டிற்குள் அத்துமீறி நழைந்து 1ம் குற்றம் சுமத்தப்பட்ட நபர் பனிதாசன் என்பவரை பார்த்து கெட்ட வார்த்தைகள் பேசியதாகவும், கையில் வைத்திருந்த கம்பியால் பனிதாசன் தலையின் முன்பக்கம் அடித்தும், தடுக்க சென்ற புகார்தாரரை 1 முதல் 9 வரையுள்ள குற்றம் சுமத்தப்பட்ட நபர்கள் கம்பியால் தலையின் பின்புறம், இடது முழங்கை, இடது கால் மூட்டு மற்றும் உடம்பில் பல பாகங்களில் அடித்தும் புகார்தாரருக்கும், பனிதாசன் ஆகியோர்களுக்கு சாதாரண காயம் ஏற்படுத்தியதாகவும், 1 முதல் 9 வரையுள்ள குற்றம் சும்மத்தப்பட்ட நபர்கள் கையில் இருந்த கம்பியை காண்பித்து புகார்தாரரையும், பனிதாசன் என்பவரையும் கொல்லாமல்



SYEDMOHAMED AMEER DHEEN
Digitally signed by SYEDMOHAMED AMEER DHEEN
Date: 2026.04.27 14:54:54 +0530

விடமாட்டேன் என்று கொலைமிரட்டல் விடுத்து மரணபயம் ஏற்படுத்திய ஒரு தகவல் **கு.வி.மு.ச 1973 பிரிவு 154(1)ன் கீழ்** பெறப்பட்டு அதன் அடிப்படையில் புலன் விசாரணை முடிக்கப்பட்டு **1ம் குற்றம் சுமத்தப்பட்ட நபரின்** செய்கையானது இந்திய தண்டனைச்சட்டம் 1860 பிரிவுகள் **147, 148, 452, 294(b), 324 மற்றும் 506 பத்தி இரண்டின்** கீழும், **2 முதல் 9 வரையிலான குற்றம் சுமத்தப்பட்ட நபர்களின்** செய்கையானது இந்திய தண்டனைச்சட்டம் 1860 பிரிவுகள் **147, 148, 452, 324 மற்றும் 506 பத்தி இரண்டின்** கீழும் தண்டிக்கத்தக்கவர்கள் என்று **குவிமுச 1973 பிரிவு 173(2)**–ன்படி குற்றமுறையீட்டாளர் குற்றப்பத்திரிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**2. கு.வி.மு.ச 1973 பிரிவு 207ன் கீழ் வழக்கு ஆவண நகல்கள்**

இவ்வழக்கின் குற்றம் சுமத்தப்பட்ட நபர்கள் நீதிமன்றத்தில் முன்னிலையானவுடன் குற்றமுறையீட்டு காவல் நிலையத்தார் தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட வழக்காவணங்களின் நகல்கள் அனைத்தும் **கு.வி.மு.ச 1973 பிரிவு 207** ன் கீழ் இலவசமாக வழங்கப்பட்டது.

**3.கு.வி.மு.ச 1973 பிரிவு 240ன் கீழ் குற்றச்சாட்டு வனைதல்**

வழக்காவணங்கள் பரிசீலனை செய்யப்பட்டதின் அடிப்படையில் இவ்வழக்கின் குற்றம் சுமத்தப்பட்ட நபர் மீது குற்றம் புரியப்பட்டிருக்கலாம் என அனுமானம் கொள்வதற்கு ஆதாரம் இருந்ததால் **கு.வி.மு.ச 1973 பிரிவு 240(1)ன் கீழ் 1ம் குற்றம் சுமத்தப்பட்ட நபர்களின்** மீது இந்திய தண்டனைச்சட்டம் 1860 பிரிவுகள் **147, 148, 452, 294(b), 324(2எண்ணிக்கைகள்) மற்றும் 506 பத்தி இரண்டின்** படியும், **2 முதல் 9 வரையிலான குற்றம் சுமத்தப்பட்ட நபர்களின்** மீது இந்திய தண்டனைச்சட்டம் 1860 பிரிவுகள் **147, 148, 452, 324 மற்றும் 506 பத்தி இரண்டின்** படியும் குற்றச்சாட்டு வனையப்பட்டது.

வனையப்பட்ட குற்றச்சாட்டுகளை **கு.வி.மு.ச 1973 பிரிவு 240(2)ன் படி** தமிழில் எடுத்துக்கூறி விளக்கி வினவப்பட்டது. இவ்வழக்கின் குற்றம் சுமத்தப்பட்ட நபர்கள் தாங்கள் குற்றவாளிகள் இல்லை எனக்கூறி குற்றச்சாட்டுகளை மறுத்து வழக்கு விசாரணைக்கு வேண்டினார்கள்.



SYEDMOHAMED AMEER DHEEN
Digitally signed by SYEDMOHAMED AMEER DHEEN
Date: 2026.04.27 14:55:03 +0530

அரசுத்தரப்பு சாட்சிய விசாரணை துவங்கும்போது குற்றம் சுமத்தப்பட்ட நபர்களும் இந்த வழக்கில் நிகழ்நிலை புகார்தாரரும் இணைந்து **சமரசமாகி** இந்த வழக்கினை **பா.நா.சு.ச 2023 பிரிவு 359(8)ன்** படியும் தாங்கள் ராசியாகி விட்டதாகவும், அதனால் மேற்படி குற்றம் சுமத்தப்பட்ட நபர்களை வழக்கிலிருந்து விடுதலை செய்ய வேண்டும் என்றும் மனு தாக்கல் செய்யப்பட்டது.

மேற்படி மனுவினை இந்நீதிமன்றம் பரிசீலித்ததில் இந்த குற்றம் சுமத்தப்பட்ட நபர்களுக்கு எதிராக வனையப்பட்ட குற்றச்சாட்டுகளில் இ.த.ச 1860 பிரிவுகளான **147, 148, 294(b), 452, 324, 506 பத்தி இரண்டு ஆகியவை பா.நா.சு.ச 2023 பிரிவு 359(1)** அல்லது பிரிவு 359(2) ன் கீழ் வரவில்லை என்பதால் இ.த.ச 1860 பிரிவு 427ஐ பொறுத்து ஏற்றுக் கொண்டும், இ.த.ச 1860 பிரிவுகளான **147, 148, 294(b), 452, 324, 506 பத்தி இரண்டு** ஆகியவற்றை பொறுத்து **தள்ளுபடி** செய்தது.

**4. பா.நா.சு.ச 2023 பிரிவு 265ன் கீழ் அரசுத்தரப்பு சாட்சிய சான்றாவணங்கள்:–**

அரசுத்தரப்பில் **அ.சா.1 முதல் அ.சா.3** வரையிலான சாட்சிகள் விசாரிக்கப்பட்டு **அ.சா.ஆ.1 முதல் அ.சா.ஆ.7** வரையிலுள்ள சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டன.

**5. பா.நா.சு.ச 2023 பிரிவு 351 (1)(b)ன் கீழ் வினவுதல்**

அரசுத்தரப்பில் சாட்சியம் அளித்துள்ள சாட்சிகளின் சாட்சியத்தினை தொகுத்து குற்றம் சுமத்தப்பட்ட நபர்களுக்கு பாதகமாக உள்ள சூழ்நிலைகள் குறித்து குற்றம் சுமத்தப்பட்ட நபர்களிடம் **பா.நா.சு.ச 2023 பிரிவு 351 (1)(b)**ன் கீழ் வினவ குற்றம் சுமத்தப்பட்ட நபர்கள் தங்கள் மீது பொய்யாக வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்று பதில் அளித்தார்கள்.

**6. பா.நா.சு.ச 2023 பிரிவு 266–ன் கீழ் குற்றம் சுமத்தப்பட்ட நபர்கள் தரப்பு சாட்சிய சான்றாவணங்கள்.**

குற்றம் சுமத்தப்பட்ட நபர்கள் தரப்பில் சாட்சிய சாண்றாவணம் எதுவும் இல்லை என்று கூறப்பட்டதால் மேற்படி தரப்பு சாட்சி முடிக்கப்பட்டு அதனடிப்படையில் இருதரப்பு வாதங்கள் கேட்கப்பட்டன.

**இருதரப்பு வாதங்களை கேட்டபின்பு இந்நீதிமன்றம் ......**



SYEDMOHAMED
AMEER DHEEN
Digitally signed by SYEDMOHAMED AMEER DHEEN
Date: 2026.04.27 14:55:08 +0530

**7. இவ்வழக்கில் தீர்மானிக்கப்பட வேண்டிய விஷயங்கள்**

1) இவ்வழக்கில் **1ம்** குற்றம் சுமத்தப்பட்ட நபர் மீதான இ.த.ச.1860 பிரிவுகள் **147, 148, 294(b), 452, 324(2 எண்ணிக்கைகள்) மற்றும் 506 பத்தி இரண்டின் கீழான** குற்றச்சாட்டுகளும், **2 முதல் 9 வரையிலான** குற்றம் சுமத்தப்பட்ட நபர்கள் மீதான இ.த.ச.1860 பிரிவுகள் **147, 148, 452, 324 மற்றும் 506 பத்தி இரண்டின் கீழான** குற்றச்சாட்டுகளும், சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு அரசுத்தரப்பில் நிரூபணம் செய்யப்பட்டுள்ளதா?

2) நிரூபிக்கப்பட்டிருப்பின் குற்றவாளிகளுக்கு வழங்கப்பட வேண்டிய தண்டனை யாவை? பிரச்சனைக்கான தீர்வுகள்

**சாட்சியங்களில்.......**

**புகார்தாரரும் பாதிக்கப்பட்ட நபருமான அ.சா.1 சகாயபுத்திரன்** தனது சாட்சியத்தில் சம்பவம் பற்றியும், தனக்கு ஏற்பட்ட காயம் பற்றியும், சம்பவம் சம்மந்தமாக புகார்மனு கொடுத்தது பற்றியும் சாட்சியம் அளித்துள்ளார்.

**பாதிக்கப்பட்ட மற்றொரு நபரான அ.சா.2 பனிதாசன்** தனது சாட்சியத்தில் சம்பவம் பற்றியும், காயம் பற்றியும் சாட்சியம் அளித்துள்ளார்.

**புலனாய்வு : –**

**அ.சா.3 திரு.ராஜ்மோகன்** கூடுதல் சாட்சி, ஆவணங்களின் அடிப்படையில், புலனாய்வு அதிகாரிக்கு பதிலாக சாட்சியமளித்ததில் இருந்து மேற்படி புலனாய்வு அதிகாரி வழக்கை கோப்புக்கு எடுத்துக்கொண்டு புலனாய்வு செய்து இறுதி அறிக்கையை காலதாமதமில்லாமல் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளதாகவும் நீதிமன்ற புலனாய்வை பொறுத்தவரை புலனாய்வு அதிகாரி விசாரணையை சரியான கோணத்தில் விசாரணை செய்தாரா? என்பதை பார்க்கும்போது முறையாக ஒரு புகார் பெறப்பட்டு அதன் அடிப்படையில் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டு அதனை தொடர்ந்து முறையாக விசாரணை செய்து அதன் அடிப்படையில் **மாதிரி வரைபடம், பார்வை மகசர் தயார் செய்தும், காயச்சான்றிதழ்கள் பெற்றும்** இந்நீதிமன்றத்தில் சமர்ப்பித்துள்ளதை



SYEDMOHAMED AMEER DHEEN
Digitally signed by SYEDMOHAMED AMEER DHEEN
Date: 2026.04.27 14:55:18 +0530

வைத்து இந்நீதிமன்றம் மேற்படி புலன் விசாரணை அதிகாரி இந்த வழக்கினை சரியான கோணத்தில் தான் செய்துள்ளார் என்பதை இந்நீதிமன்றம் கருத்தில் கொள்கிறது.

**<u>இந்த வழக்கில் எடுத்தியம்பப்பட்ட சாட்சிய சான்றாவணங்களின் மீதான ஆய்வு</u>**

ஒரு வழக்கின் துவக்கப்புள்ளி என்பது ஒரு சம்பவத்தினால் ஒரு நபர் பாதிப்படைந்து அந்த பாதிப்பின் வெளிப்பாடாக ஒரு புகார் தகவலாக பெறப்பட்டு அந்த தகவலானது வாக்குமூலமாக பெறப்பட்டு அதனை தொடர்ந்து மேற்படி சம்பவத்தை கண்ணுற்ற சாட்சிகள், கேள்விப்பட்ட சாட்சிகள், சந்தர்ப்ப சூழ்நிலைகள் மற்றும் இதர சங்கதிகளை கொண்டே எழுகிறது..

இந்த வழக்கை பொறுத்தவரை நிகழ்நிலை புகார்தாரரும் பாதிக்கப்பட்ட நபருமான **அ.சா.1 சகாயபுத்திரன், அ.சா.2 பனிதாசன்** ஆகியோர்கள் குற்றம் சுமத்தப்பட்ட நபர்களுடன் சமாதானமாகி சமாதானமனு தாக்கல் செய்துள்ள நிலையில் இந்த வழக்கில் அரசுத்தரப்பு சங்கதிகளுக்கு ஆதரவாக மேற்படி **அ.சா.1 சகாயபுத்திரன், அ.சா.2 பனிதாசன்** ஆகிய இருவருமோ அவர்கள் தரப்பு சாட்சிகளோ எந்தவித சாட்சியமும் அளிக்க மாட்டார்கள் என்பது ஒரு சாமானியனின் புரிதலின் தன்மை என்பதை இந்நீதிமன்றம் கருத்தில் கொள்கிறது.

**<u>இந்த வழக்கை பொறுத்தவரை சட்டப்பிரிவான</u>**

**<u>இ.த.ச 1860 பிரிவு 147 ஐ பொறுத்து</u> :–**

**முதலாவதாக** :– இந்த குற்றம் சுமத்தப்பட்ட நபர்கள் சட்ட விரோதமாக கலகம் செய்யும் நோக்கத்துடன் ஒன்று கூடி சென்றார்களா?

**<u>இ.த.ச 1860 பிரிவு 148 ஐ பொறுத்து</u> :–**

**இரண்டாவதாக** :– இந்த குற்றம் சுமத்தப்பட்ட நபர்கள் சட்ட விரோதமாக கைகளில் ஆயுதங்களுடன் கலகம் செய்யும் நோக்கத்துடன் ஒன்று கூடி சென்றார்களா?

**<u>இ.த.ச 1860 பிரிவு 294(b) ஐ பொறுத்து</u> :–**

**மூன்றாவதாக :-** இந்த 1ம் குற்றம் சுமத்தப்பட்ட நபர் யாரேனும் ஒரு நபரை ஒரு பொது இடத்தில் அல்லது அதற்கு அருகிலோ ஏதாவது ஒரு ஆபாசச்செயலையோ அல்லது



SYEDMOHAMED AMEER DHEEN
Digitally signed by SYEDMOHAMED AMEER DHEEN
Date: 2026.04.27 14:55:26 +0530

ஆபாசமான பாடலையே அல்லது வார்த்தைகளோ பாடி அல்லது உச்சரித்தது அல்லது கூறி அதனால் யாரேனும் ஒரு நபருக்கு தொல்லை ஏற்பட்டதா?

**இ.த.ச 1860 பிரிவு 452 ஐ பொறுத்து :–**

**நான்காவதாக :-** இந்த குற்றம் சுமத்தப்பட்ட நபர்கள் அ.சா.2ன் வீட்டிற்குள் அத்துமீறி நுழைந்தார்களா?

**இ.த.ச 1860 பிரிவு 324 ஐ பொறுத்து :–**

**ஐந்தாவதாக :-** இந்த குற்றம் சுமத்தப்பட்ட நபர்கள் அபாயகரமான ஆயுதத்தால் அ.சா.1, அ.சா.2ஐ தாக்கி சாதாரண காயம் ஏற்படுத்தினார்களா?

**இதச 1860 பிரிவு 506 பத்தி இரண்டை பொறுத்து**

**ஆறாவதாக –** குற்றம் சுமத்தப்பட்ட நபர்கள் அ.சா.1, அ.சா.2ஐ குற்றுமுறு அச்சுறுத்தல் செய்து அதனால் அவர்களுக்கு உடனடியான உயிர் பயம் ஏற்பட்டதா?

போன்ற கூறுகளை ஆய்வு செய்தால் மட்டுமே இந்த வழக்கிற்கான பொருண்மைக்கு தீர்வு காண இயலும் என்பதை இந்நீதிமன்றம் கருத்தில் கொள்கிறது.

**மேற்சொன்ன 6 வினாக்களுக்கான ஆய்வும் அதற்கான காரணமும்**

அரசுத்தரப்பு முதலில் புகார் அளித்தவரின் புகாரினை மெய்ப்பிக்கவேண்டும் பின்னர் இந்த வழக்கை பொறுத்தவரை அது தொடர்பான ஆவணங்களான **முதல் தகவல் அறிக்கை, பார்வை மகசர், மாதிரி வரைபடம், காயச்சான்றிதழ்** ஆகியவற்றை இந்நீதிமன்றத்தின் முன் சந்தேகத்திற்கிடமின்றி நிரூபணம் செய்யவேண்டும் என்பது சட்டத்தின் நிலைப்பாடாகும். இந்த வழக்கிலும் மேற்காணும் சங்கதிகள் தொடர்பான ஆவணங்களை நிரூபிக்கவேண்டிய பொறுப்பு **பா.சா.அ 2023 பிரிவு 104 மற்றும் பிரிவு 2ன் கீழ்** அரசுத்தரப்பையே முழுவதுமாக சார்ந்துள்ளது.

அரசுத்தரப்பில் இந்த வழக்கினை அதன் சங்கதிகளை பொறுத்து குற்றம் சுமத்தப்பட்ட நபர்களுக்கு எதிராக இந்த வழக்கில் பாதிக்கப்பட்ட நபரும், நட்சத்திர சாட்சியுமான **அ.சா.1 சகாயபுத்திரன், அ.சா.2 பனிதாசன்** ஆகியோர்களை முன்னிறுத்தி தீர்மானிக்க வேண்டிய சூழ்நிலையில் இவ்வழக்கின் சாட்சியங்களை பின்வருமாறு இந்நீதிமன்றம் ஆய்வு செய்கிறது.



SYEDMOHAMED AMEER DHEEN

Digitally signed by SYEDMOHAMED AMEER DHEEN
Date: 2026.04.27 14:55:36 +0530

அரசுத்தரப்பில், இந்த வழக்கில் நிகழ்நிலை புகார்தாரரும், பாதிக்கப்பட்ட நபருமான **அ.சா.1 சகாயபுத்திரன்** இந்த வழக்கின் குற்றம் சுமத்தப்பட்ட நபர்களை பொறுத்து தனது சாட்சியத்தில் சுமார் 6 வருடங்களுக்கு முன்பு தனது மாமனார் வீட்டில் இருந்த போது தன்னை யாரோ அடித்துவிட்டார்கள் என்றும், அதில் தனக்கு காயம் ஏற்பட்டது என்றும், சந்தேகத்தின் அடிப்படையில் குற்றம் சுமத்தப்பட்ட நபர்களின் மீது புகார் வாக்குமூலம் கொடுத்துவிட்டேன் என்றும், **மற்றொரு பாதிக்கப்பட்ட நபரான அ.சா.2 பனிதாசன்** தனது சாட்சியத்தில் சுமார் 6 வருடங்களுக்கு முன்பு தன் வீட்டின் அருகே நின்று கொண்டிருந்த போது தன்னை யாரோ அடித்துவிட்டார்கள் என்றும், அதில் தனக்கு காயம் ஏற்பட்டது என்றும், சந்தேகத்தின் அடிப்படையில் குற்றம் சுமத்தப்பட்ட நபர்களின் மீது தனது மருமகன் புகார்மனு கொடுத்துவிட்டார் என்றும் சாட்சியம் அளித்திருப்பதை பொறுத்து அரசுத்தரப்பில் அதன் சங்கதிகளை பொறுத்து இந்த குற்றம் சுமத்தப்பட்ட நபர்கள் **சட்ட விரோதமாக கலகம் செய்யும் நோக்கத்துடன் கைகளில் ஆயுதங்களுடன் ஒன்று கூடி வந்தார்கள் என்றோ, ஆபாசமாக பேசி அதனால் யாரேனும் ஒருவருக்கு தொல்லை ஏற்பட்டது என்றோ அ.சா.1 மற்றும் அ.சா.2ஐ அபாயகரமான ஆயுதத்தால் தாக்கி சாதாரண காயம் ஏற்படுத்தினார்கள் என்றோ, அ.சா.2ன் வீட்டிற்குள் அத்துமீறி நுழைந்தார் என்றோ, குற்றமுறு அச்சுறுத்தல் செய்து உடனடியாக உயிர் அச்சம் ஏற்பட்டது என்றோ** எந்த சாட்சியமும் முன்னிறுத்தவில்லை என்று இந்நீதிமன்றம் கருத்தில் கொள்கிறது.

அரசுத்தரப்பில் முன்னிறுத்தப்பட்ட சாட்சியங்களில் **அ.சா.ஆ.1** ஆக குறியீடு செய்யப்பட்ட புகார்வாக்குமூலம் அதனை தொடர்ந்து குறியீடு செய்யப்பட்ட **அ.சா.ஆ.3** ஆன முதல் தகவல் அறிக்கையும் வழக்கில் முன்னிறுத்தப்பட்ட சாட்சியங்களை பொறுத்து ஏற்றுக்கொள்ளத்தக்க ஆவணங்கள் இல்லை என்றும், மேற்படி ஆவணங்கள் **நிரூபிக்கப்படவில்லை** என்றும் இந்நீதிமன்றம் கருத்தில் கொள்கிறது.

காயம் குறித்த சங்கதியை பொறுத்து மேற்படி **அ.சா.1 சகாயபுத்திரன், அ.சா.2 பனிதாசன்** காயம் அடைந்துள்ளார்களா அதற்காக சிகிச்சை எடுத்துக் கொண்டார்களா என்பதை இந்நீதிமன்றம் பரிசீலிக்கையில் **அ.சா.ஆ.6, அ.சா.ஆ.7** ஆக குறியீடு செய்யப்பட்ட கருத்துரையுடன் கூடிய விபத்து பதிவேடு **அ.சா.1 சகாயபுத்திரன், அ.சா.2**



SYEDMOHAMED AMEER DHEEN
Digitally signed by SYEDMOHAMED AMEER DHEEN
Date: 2026.04.27 14:55:41 +0530

**பனிதாசன்** ஆகியோர்கள் காயம் அடைந்துள்ளார்கள் என்பதும், அதற்காக சிகிச்சை எடுத்துக் கொண்டார்கள் என்பதும் அரசுத் தரப்பில் ஆவணங்களின் அடிப்படையில் சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபணம் செய்யப்பட்டுள்ளது என்று இந்நீதிமன்றம் கருத்தில் கொள்கிறது.

ஆனால் மேற்படி காயத்தை இந்த வழக்கின் குற்றம் சுமத்தப்பட்ட நபர்கள் தான் ஏற்படுத்தினார் என்பதற்கான எந்தவித சாட்சியங்களையும் முன்னிறுத்தவில்லை என்பதையும் அதனால் காயத்தை யார் ஏற்படுத்தினார் என்ற சங்கதியானது நிரூபிக்கப்படவில்லை என்று இந்நீதிமன்றம் கருத்தில் கொள்கிறது.

அரசுத்தரப்பில் **அ.சா.3** மட்டுமே அரசுத்தரப்பு சங்கதிகளுக்கு ஆதரவாக சாட்சியம் அளித்துள்ளார். மேற்படி வழக்கின் ஒரு புலன் விசாரணை அதிகாரி சாட்சியமானது சம்பவ இடத்தில் தயார் செய்யப்பட்ட குற்றம் நடந்த இடத்தை குறிப்பிட்டுக்காட்டக்கூடிய மாதிரி வரைபடம், பார்வை மகசர் **அ.சா.ஆ.4, அ.சா.ஆ.5,** ஆகியவற்றை பொறுத்து நேரடி சாட்சியம் என்றாலும் மற்ற சங்கதிகளை பொறுத்து அவர் கேள்விநிலை சாட்சியாவார். மேற்படி கேள்விநிலை சாட்சியம் என்பது **பா.சா.அ 2023 பிரிவு 55ன் கீழ்** ஏற்றுக்கொள்ளத்தக்கதல்ல என்பதையும் கருத்தில் கொண்டு **அ.சா.3 ஆன காவல் அதிகாரியின்** சாட்சியத்தை மட்டும் வைத்து குற்றம் சுமத்தப்பட்ட நபர்களுக்கு எதிராக இந்த வழக்கினை தீர்வு காண இயலாது, என்பதையும் இந்நீதிமன்றம் கருத்தில் கொள்கிறது.

**பா.சா.அ 2023 பிரிவு 139**ன்படி ஒரு வழக்கினை தீர்மானிப்பதற்கு சாட்சிகளின் எண்ணிக்கை முக்கியமல்ல என்றும் சாட்சியின் நம்பகத்தன்மை மட்டுமே முக்கியம் என்றும் தெளிவாக கூறப்பட்டுள்ளதை இந்நீதிமன்றம் கருத்தில் கொள்கிறது. அதனடிப்படையில் இந்த வழக்கின் பாதிக்கப்பட்ட நபர்களா **அ.சா.1 சகாயபுத்திரன், அ.சா.2 பனிதாசன்** அரசுத்தரப்புக்கு ஆதரவாக சாட்சியமளிக்காத நிலையில் மற்ற சாட்சியங்கள் எவ்வகையிலும் அரசுத்தரப்பை உறுதிப்படுத்தவில்லை என்பது இந்நீதிமன்றம் கருத்தில் கொள்கிறது.



SYEDMOHAMED AMEER DHEEN

Digitally signed by SYEDMOHAMED AMEER DHEEN
Date: 2026.04.27 14:55:51 +0530

**<u>இந்நீதிமன்றம் கருத்தில் கொண்ட சாட்சியங்களின் சாராம்சத்தின் தீர்வு :</u>**

மேலும் அரசுத்தரப்பில் கூறியுள்ளது போல் மேற்படி சம்பவத்தை இந்த வழக்கில் குற்றம் சுமத்தப்பட்ட நபர்கள் தான் செய்தார்கள் என்பதற்கான தகுந்த சாட்சிய சான்றாவணங்களை அரசுத்தரப்பில் சமர்ப்பிக்காததால் அரசுத்தரப்பு தனது தரப்பை நீதிமன்றத்திற்கு சமர்பிக்கவில்லை என்பதை கருத்தில் கொள்கிறது.

இந்நீதிமன்றம் மேற்சொன்ன கருத்தில் கொண்ட விஷயங்களை வைத்தும் சாட்சியம் சான்றாவண சான்று கூறுகளின் அடிப்படையிலும், இந்நீதிமன்றம் அரசுத்தரப்பில் தனது தரப்பை இந்த வழக்கில் **1ம்** குற்றம் சுமத்தப்பட்ட நபர் மீதான இ.த.ச.1860 பிரிவுகள் **147, 148, 294(b), 452, 324(2 எண்ணிக்கைகள்) மற்றும் 506 பத்தி இரண்டின் கீழான குற்றச்சாட்டுகள் மெய்பிக்கவில்லை** என்றும், **2 முதல் 9 வரையிலான** குற்றம் சுமத்தப்பட்ட நபர்கள் மீதான இ.த.ச.1860 பிரிவுகள் **147, 148, 452, 324 மற்றும் 506 பத்தி இரண்டின் கீழான குற்றச்சாட்டுகள் மெய்பிக்கவில்லை** என்றும், **பா.சா.அ. 2023 பிரிவு 2 மற்றும் பிரிவு 104ன்** படியும் தீர்வு காண்கிறது.

**<u>8.வழக்கில் சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுகளின் மீதான ஆய்வு</u>**

இந்த வழக்கில் அரசுத்தரப்பில் குற்றப்பத்திரிக்கையில் **1ம்** குற்றம் சுமத்தப்பட்ட நபர்களுக்கு எதிரான இ.த.ச.1860 பிரிவுகள் **147, 148, 294(b), 452, 324(2 எண்ணிக்கைகள்) மற்றும் 506 பத்தி இரண்டின்** கீழான குற்றச்சாட்டுகளின் சாரம்சத்தை பொறுத்தும், **2 முதல் 9 வரையிலான** குற்றம் சுமத்தப்பட்ட நபர்கள் மீதான இ.த.ச.1860 பிரிவுகள் **147, 148, 452, 324 மற்றும் 506 பத்தி இரண்டின் கீழான** குற்றச்சாட்டுகளின் சாரம்சத்தை பொறுத்தும் எவ்வித சாட்சியங்களும் அரசுத்தரப்பில் முன்னிலைப் படுத்தப்படவில்லை என்பதை கருத்தில் கொள்கிறது.

**9. <u>முடிவாக</u>,**

**1ம்** குற்றம் சுமத்தப்பட்ட நபரான **வால்டர் த/பெ. சிலுவைஇருதயம்** என்பவர் மீதான, **இந்திய தண்டனை சட்டம் 1860 பிரிவுகள் 147, 148, 452, 294(b), 324(2 எண்ணிக்கைகள்) மற்றும் 506 பத்தி இரண்டின்** கீழான குற்றச்சாட்டுகளும், **2ம்** குற்றம் சுமத்தப்பட்ட நபரான **சோனாஸ், த/பெ. சால்வதே, 3ம்** குற்றம் சுமத்தப்பட்ட நபரான **சீலன்**



SYEDMOHAMED AMEER DHEEN

Digitally signed by SYEDMOHAMED AMEER DHEEN
Date: 2026.04.27 14:55:56 +0530

**த/பெ. பிரான்சீஸ், 4ம்** குற்றம் சுமத்தப்பட்ட நபரான **டிக்சிசன் என்ற டிக்சன் த/பெ. சிலுவை இருதயம், 5ம்** குற்றம் சுமத்தப்பட்ட நபரான **டிசார்பின் என்ற டிசல்பின் த/பெ. சிலுவைஇருதயம், 6ம்** குற்றம் சுமத்தப்பட்ட நபரான **ஜெகன் த/பெ. சிலுவை இருதயம், 7ம்** குற்றம் சுமத்தப்பட்ட நபரான **ஷாஜி த/பெ. சிலுவை இருதயம், 8ம்** குற்றம் சுமத்தப்பட்ட நபரான **ஆல்ட்ரின் த/பெ. பிரான்சீஸ், 9ம்** குற்றம் சுமத்தப்பட்ட நபரான **வால்டர் என்ற வால்டர் நிவாஸ் த/பெ, பிரான்சீஸ்,** ஆகியோர்கள் மீதான **இந்திய தண்டனை சட்டம் 1860 பிரிவுகள் 147, 148, 452, 324 மற்றும் 506 பத்தி இரண்டின்** கீழான குற்றசாட்டுகளும், அரசுத்தரப்பில் **நிரூபணம் செய்யப்படவில்லை** என்பதால் குற்றம் சுமத்தப்பட்ட நபர்களை **குற்றவாளிகள் இல்லை** என இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

எனவே **1ம்** குற்றம் சுமத்தப்பட்ட நபரான **வால்டர் த/பெ. சிலுவைஇருதயம், 2ம்** குற்றம் சுமத்தப்பட்ட நபரான **சோனாஸ், த/பெ. சால்வதே, 3ம்** குற்றம் சுமத்தப்பட்ட நபரான **சீலன் த/பெ. பிரான்சீஸ், 4ம்** குற்றம் சுமத்தப்பட்ட நபரான **டிக்சிசன் என்ற டிக்சன் த/பெ. சிலுவை இருதயம், 5ம்** குற்றம் சுமத்தப்பட்ட நபரான **டிசார்பின் என்ற டிசல்பின் த/பெ. சிலுவைஇருதயம், 6ம்** குற்றம் சுமத்தப்பட்ட நபரான **ஜெகன் த/பெ. சிலுவை இருதயம், 7ம்** குற்றம் சுமத்தப்பட்ட நபரான **ஷாஜி த/பெ. சிலுவை இருதயம், 8ம்** குற்றம் சுமத்தப்பட்ட நபரான **ஆல்ட்ரின் த/பெ. பிரான்சீஸ், 9ம்** குற்றம் சுமத்தப்பட்ட நபரான **வால்டர் என்ற வால்டர் நிவாஸ் த/பெ, பிரான்சீஸ்** ஆகியோர்களை வழக்கின் குற்றச்சாட்டுகளிலிருந்து விடுதலை செய்தும், **பாரதிய நாகரிக் சுரக் ஷா சங்கீதா 2023 பிரிவு 271(1)ன்** படி வழக்கிலிருந்தும் விடுதலை செய்தும் தீர்ப்பளிக்கப்படுகிறது.

**10. பா.நா.சு.ச 2023 பிரிவு 498 ன் கீழ் உத்தரவு**

வழக்கில் சொத்துக்கள் எதுவும் தாக்கல் செய்யப்படாததால் பா.நா.சு.ச 2023 பிரிவு 498 ன் கீழ் உத்தரவு இல்லை.

**11. பா.நா.சு.ச 2023 பிரிவு 395, 396ன் கீழ் உத்தரவு**

வழக்கின் தன்மை சந்தர்ப்ப சூழ்நிலை ஆகியவற்றை கருத்தில் கொண்டு **பா.நா.சு.ச 2023 பிரிவு 395, 396** ன் கீழ் உத்தரவுகள் எதுவும் இல்லை.



SYEDMOHAMED AMEER DHEEN

Digitally signed by SYEDMOHAMED AMEER DHEEN
Date: 2026.04.27 14:56:07 +0530

**12. பா.நா.சு.ச 2023 பிரிவு 481– ன் கீழ் உத்தரவு**

வழக்கில் **பா.நா.சு.ச 2023 பிரிவு 481–**ன் கீழ் பிணையப்பத்திரம் பெறப்பட்டுள்ளது. மேற்படி பிணையப்பத்திரமானது அப்பிணைப்பத்திரத்திரம் பெறப்பட்ட தேதியில் இருந்து 6 மாத காலத்திற்கு நடைமுறையில் இருக்கும். பின்னர் அப்பிணையப்பத்திரம் காலாவதியாகி விடும் .

இத்தீர்ப்புரை என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு பின்னர் என்னால் பிழை நீக்கம் செய்யப்பட்டு இன்று **(27.04.2026)** திறந்த நீதிமன்றத்தில் அவையறிய தீர்ப்புரை அவையறியப்பகரப்பட்டது.

நீதித்துறை நடுவர்
இரணியல்

**பின் இணைப்பு**

**அரசுத்தரப்பு சாட்சிகள்**

| | | |
|---|---|---|
| அ.சா.1 | சகாயபுத்திரன் | நிகழ்நிலை புகார்தாரர் மற்றும் பாதிக்கப்பட்ட நபர் |
| அ.சா.2 | பனிதாசன் | பாதிக்கப்பட்ட நபர் |
| அ.சா.3 | ராஜ்மோகன் | கூடுதல் சாட்சி |

**அரசுத்தரப்பில் குறியிடப்பட்ட சான்றாவணங்கள்**

| | | |
|---|---|---|
| அ.சா.ஆ.1 | 29.07.2018 | புகார்மனு |
| அ.சா.ஆ.2 | 22.04.2026 | சமாதான மனுவில் உள்ள அ.சா.1ன் கையொப்பம் |
| அ.சா.ஆ.3 | 29.07.2018 | முதல் தகவல் அறிக்கை |
| அ.சா.ஆ.4 | 30.07.2018 | மாதிரி வரைபடம் |
| அ.சா.ஆ.5 | 30.07.2018 | பார்வை மகசர் |
| அ.சா.ஆ.6 | –– | காயச்சான்றிதழ் |



SYEDMOHAMED AMEER DHEEN

Digitally signed by SYEDMOHAMED AMEER DHEEN
Date: 2026.04.27 14:56:13 +0530

| | | |
|---|---|---|
| அ.சா.ஆ.7 | -- | காயச்சான்றிதழ் |

**அரசுத்தரப்பு சான்று பொருட்கள்** : *இல்லை*

**குற்றம் சுமத்தப்பட்ட நபர்கள் தரப்பில் சாட்சி, சான்றாவணம்** : இல்லை

SYEDMOHAMED AMEER DHEEN

Digitally signed by SYEDMOHAMED AMEER DHEEN
Date: 2026.04.27 14:56:20 +0530

**நீதித்துறை நடுவர்**
**இரணியல்**

Judicial Magistrate Court, Eraniel

Court Seal.

" The parties shall apply, as soon as possible, for the return of all exhibits which they may wish to preserve, as the record will be liable to be destroyed after three years from this date".